**சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேரும் வட்டி தொடர்பான 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க விளக்கக் குறிப்பு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2020 மே 04

**கொவிட்-19 பாதிப்பிற்குட்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கை**

**மற்றும்**

**கொவிட்-19இன் தாக்கத்திற்குள்ளான தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர் உள்ளிட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான ரூ.50 பில்லியன் ஆறுமாத மீள்நிதியிடல் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கை என்பனவற்றிற்கான பொருள் விளக்கங்கள்**

சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்கின்ற வட்டி தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் பின்வரும் விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.

1. வட்டியானது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் **சலுகை வீதத்தில்** தொடர்ந்தும் ஒன்றுசேர்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒன்றுசேர்ந்த வட்டியைக் **கடன்பாட்டாளரிடமிருந்து அறவிடப்படக்கூடிய வட்டியற்ற புதிய தவணைக் கடனுக்கு** மாற்றுதலும் வேண்டும்.

   ***உ-ம்: மாதாந்த வட்டி விதிப்பினைக் கணிப்பதற்காக:***

   *2020 ஏப்பிறல் மாதமொன்றிற்கான வட்டி விதிப்பு: கடன் இசைவுத்தாமத காலப்பகுதி தொடங்குகையில் வெளிநின்ற கடன் தொகை (2020 ஏப்பிறல் தொடக்கம்)* (சலுகை வட்டி/12)*

2. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தகைமையுடைய கடன்பாட்டாளரின் சம்மதத்துடன் கீழே தரப்பட்டுள்ளவாறு இரண்டு தேர்வுகளைப் பயன்படுத்தி கடன்பாட்டாளர்களிடமிருந்து வட்டியற்ற கடனை அறவிட்டுக் கொள்ளலாம்.

   **தேர்வு 1:** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் **சமமானதொரு மாதாந்த தவணைகளில்** வட்டியற்ற தவணைக் கடன்களை அறவிடலாம் என்பதுடன் மீள்கொடுப்பனவுக் காலம் இரண்டாண்டுகளாக அல்லது கொடுகடன் வசதியின் எஞ்சிய முதிர்ச்சிக்காலம் இதில் எது **குறைவானதோ** அதுவாக இருத்தல் வேண்டும். தேர்வு 1 இற்கான சலுகை வட்டி வீதம் **6.5 சதவீதம் கொண்ட உச்சமட்டத்திற்குட்பட்டு** ஒப்பந்த ரீதியான வீதத்தில் மூன்றிலொன்றாக (1/3) இருத்தல் வேண்டும்.

   **தேர்வு 2:** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மூல ஒப்பந்தத்தின் மாதாந்த தவணைத் தொகையினை விஞ்சாத விதத்திலான தவணைகளில் ஒப்பந்தக்காலம் முடிவடைந்ததன் பின்னர் (கடன் இசைவுத்தாமதத்தினைப் பரிசீலனையில் கொண்ட பின்னர் நீடிக்கப்பட்ட ஒப்பந்த ரீதியான காலம்) வட்டியற்ற தவணைக் கடனை அறவிடல் வேண்டும். தேர்வு 2 இற்கு விதிக்கப்படக்கூடிய சலுகை வீதம் **7.5 சதவீதம் கொண்ட உச்சமட்டத்திற்குட்பட்டு** ஒப்பந்த ரீதியான வீதம் **+1 சதவீதத்தின்** மூன்றிலொன்றாக (1/3) இருத்தல் வேண்டும்.

3. செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டிச் செலவு மற்றும் பணத்தின் நேரப் பெறுமதி என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு தேர்வின் வேறுபட்ட சிக்கலான தன்மையினைச் சரியான முறையில் விளக்கிய பின்னர் தெரிவுசெய்யப்பட்ட தேர்விற்காக கடன்பாட்டாளரின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**உதாரணம் 1, தேர்வு 1**

| | |
|---|---|
| கடன் வழங்கப்பட்ட திகதி | 2019 ஏப்பிறல் 01 |
| கடன் தொகை | ரூ.2,000,000 |
| கடன் காலம் (ஆரம்பத்தில்) | 24 மாதங்கள் |
| வட்டி வீதம் | ஆண்டிற்கு 16 சதவீதம் |
| மாதாந்த தவணை (பெறுதி) | ரூ.97,926 |
| 2020 மாச்சு இறுதியிலுள்ளவாறு எஞ்சிய முதிர்ச்சி (ஆரம்பத்தில் எஞ்சிய முதிர்ச்சி + சட்ட இசைவுத்தாமதக் காலம்) | 18 மாதங்கள் |
| 2020 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு சட்ட இசைவுத்தாமதக் காலப்பகுதியின் பின்னர் எஞ்சிய முதிர்ச்சி | 12 மாதங்கள் |

(அ) சட்ட இசைவுத்தாமதம் 2020 ஏப்பிறலிலிருந்து 2020 செத்தெம்பர் வரையான தவணைகளுக்கு சட்ட ஏற்புடைத்தாக இருக்கும். வாடிக்கையாளர் 2020 ஒத்தோபரிலிருந்து ரூ.97,926 கொண்ட மாதாந்த தவணையில் மீள்கொடுப்பனவினைத் தொடங்கி 2021 செத்தெம்பர் இறுதி வரை தொடரலாம்.

(ஆ) சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி ரூ.29,104 (மாதமொன்றிற்கு 16 சதவீத வட்டியில் 1/3 6 மாதங்களுக்கு) ஆக இருக்குமென்பதுடன் இதனை 12 மாதங்களுக்கு வட்டியற்ற தவணைக் கடன்களுக்கு மாற்றிக் கொள்ளலாம். இப்பெறுமதியினை வாடிக்கையாளர்களிடமிருந்து 12 மாத சமமான மாதாந்த தவணைகளில் (அதாவது சட்ட இசைவுத்தாமத காலம் முடிவடைந்த பின்னர் 24 மாதங்கள் அல்லது எஞ்சியுள்ள முதிர்ச்சிக் காலம் இதில் எது குறைவானதோ), மாதமொன்றிற்கு ரூ.2,425 இல் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

**உதாரணம் 2, தேர்வு 1**

| | |
|---|---|
| கடன் வழங்கப்பட்ட திகதி | 2019 ஏப்பிறல் 01 |
| கடன் தொகை | ரூ.2,000,000 |
| கடன் காலம் (ஆரம்பத்தில்) | 60 மாதங்கள் |
| வட்டி வீதம் | ஆண்டிற்கு 24 சதவீதம் |
| மாதாந்த தவணை (பெறுதி) | ரூ.57,536 |
| 2020 மாச்சு இறுதியிலுள்ளவாறு எஞ்சிய முதிர்ச்சி (ஆரம்பத்தில் எஞ்சிய முதிர்ச்சி + சட்ட இசைவுத்தாமதக் காலம்) | 54 மாதங்கள் |
| 2020 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு சட்ட இசைவுத்தாமதக் காலப்பகுதியின் பின்னர் எஞ்சிய முதிர்ச்சி | 48 மாதங்கள் |

(அ) சட்ட இசைவுத்தாமதம் 2020 ஏப்பிறலிலிருந்து 2020 செத்தெம்பர் வரையான தவணைகளுக்கு சட்ட ஏற்புடைத்தாக இருக்கும். வாடிக்கையாளர் 2020 ஒத்தோபரிலிருந்து ரூ.57,536 கொண்ட மாதாந்த தவணையில் மீள்கொடுப்பனவினை தொடங்கி 2024 செத்தெம்பர் இறுதி வரை தொடரலாம்.

(ஆ) சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி ரூ.58,139 (மாதமொன்றிற்கு உச்சஎல்லை 6.5 சதவீத வட்டியில் 6 மாதங்களுக்கு) ஆக இருக்குமென்பதுடன் இதனை 24 மாதங்களுக்கான வட்டியற்ற தவணைக் கடன்களுக்கு மாற்றிக் கொள்ளலாம். இப்பெறுமதியினை வாடிக்கையாளர்களிடமிருந்து 24 மாத சமமான மாதாந்த தவணைகளில் (அதாவது சட்ட இசைவுத்தாமத காலம் முடிவடைந்த பின்னர் 24 மாதங்கள் அல்லது எஞ்சியுள்ள முதிர்ச்சிக் காலம் இதில் எது குறைவானதோ), மாதமொன்றிற்கு ரூ.2,422 இல் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

**உதாரணம் 3, தேர்வு 2**

| | |
|---|---|
| கடன் வழங்கப்பட்ட திகதி | 2019 ஏப்பிறல் 01 |
| கடன் தொகை | ரூ.2,000,000 |
| கடன் காலம் (ஆரம்பத்தில்) | 60 மாதங்கள் |
| வட்டி வீதம் | ஆண்டிற்கு 24 சதவீதம் |
| மாதாந்த தவணை (பெறுதி) | ரூ.57,536 |
| 2020 மாச்சு இறுதியிலுள்ளவாறு எஞ்சிய முதிர்ச்சி (ஆரம்பத்தில் எஞ்சிய முதிர்ச்சி + சட்ட இசைவுத்தாமதக் காலம்) | 54 மாதங்கள் |
| 2020 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியின் பின்னர் எஞ்சிய முதிர்ச்சி | 48 மாதங்கள் |

(அ) சட்ட இசைவுத்தாமதம் 2020 ஏப்பிறலிலிருந்து 2020 செத்தெம்பர் வரையான தவணைகளுக்கு சட்ட ஏற்புடைத்தாக இருக்கும். வாடிக்கையாளர் 2020 ஒத்தோபரிலிருந்து ரூ.57,536 கொண்ட மாதாந்த தவணையில் மீள்கொடுப்பனவினை தொடங்கி 2024 செத்தெம்பர் இறுதி வரை தொடரலாம்.

(ஆ) சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி ரூ.67,223 (மாதமொன்றிற்கு உச்சஎல்லை 7.5 சதவீத வட்டியில் 6 மாதங்களுக்கு) ஆக இருக்குமென்பதுடன் இதனை 24 மாதங்களுக்கான வட்டியற்ற தவணைக் கடன்களுக்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். இப்பெறுமதியினை வாடிக்கையாளர்களிடமிருந்து 24 மாத சமமான மாதாந்த தவணைகளில் (அதாவது சட்ட இசைவுத்தாமத காலம் முடிவடைந்த பின்னர் 24 மாதங்கள் அல்லது எஞ்சியுள்ள முதிர்ச்சிக் காலம் இதில் எது குறைவானதோ), மாதமொன்றிற்கு ரூ.2,422 இல் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.